# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.வ.எண். 117/2018

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ம் நாள் திங்கட்கிழமை.
இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்கள் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

வா.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அருளரசன் | | |
| த/பெ. | காசி | வட்டம் | பொன்னேரி |
| கிராமம் | பெரவள்ளூர் | வயது | 38 |
| தொழில் | தகவல் தொழில்நுட்பம் | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி 3 ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தயும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய தான். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. முதல் வாதி எனது தாயார். அப்பாவரம் எனது ஊரியிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் உள்ளது. வாதிகள் கேட்டுக்கொண்டதால் சாட்சி சொல்கிறேன். எனது தாத்தாவிடமிருந்து சொத்து கிடைத்ததால் பூர்வீக

சொத்து என்று சொல்கிறேன். முன்னோர்களிடமிருந்து எனக்கு கிடைத்ததால் பூர்வீக சொத்து என்று சொல்கிறேன். பூர்வீக சொத்து என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து அப்பாவரம் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கே ரோடு உள்ளது. தெற்கே சாரங்கம் அவர்களின் சகோததர்களுக்கு சொந்தமான நிலம் உள்ளது. மேற்கே மாரி என்வரின் நிலம் உள்ளது. வடக்கே காலி நிலம் உள்ளது. யாருடையது என்று எனக்கு தெரியாது.

2. சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. முனிவேல் பெயரிலுள்ள பட்டா எண் எனக்கு ஞாபகமில்லை. முனிவேல் தற்போது உயிருடன் இல்லை. முனிவேலுக்கு 4 மகன்கள, 3 மகள்கள். இந்த தசரதன், ஜோதி லட்சுமி, சுலோச்சனா மற்றும் ஜெயக்கொடி ஆகியோர் தாக்கல் செய்தார்கள். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் வாதிகள் சொல்லியதன் பெயரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் பயிர் செய்கிறார்கள் என்றால் பிரதிவாதிகள் குத்தகைக்குதான் பயிர் செய்கிறார்கள். சில வருடங்களாக குத்தகைப்பணம் தரவில்லை. நாங்கள் வழக்கு சொத்தை ஜெயா பாஸ்டர் தந்தைக்கு குத்தைக்கு கொடுத்தோம். அவர் தற்போது உயிருடன் இல்லை. ஜெயா பாஸ்டரின் குடும்ப உறுப்பினர்கள் பயிர் செய்கிறார்கள். யார் பயிர் செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.